RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22213

OPEN ACCESS

# எட்டிமரத் தோட்டத்துக் கருப்புசாமி வரலாறும் வழிபாடும்

**உ. வினோதினி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, அறச்சலூர், ஈரோடு-638101, தமிழ்நாடு, இந்தியா

# History and Worship of the Ettimarath Thottaththu Karuppasamy

**U. Vinothini** [a, *]

[a] Department of Tamil, Navarasam Arts and Science College for Women, Arachalur, Erode-638101, Tamil Nadu, India

* Corresponding Author: vino.26489@gmail.com

Received: 28-12-2021
Revised: 19-03-2022
Accepted: 28-03-2022
Published: 26-04-2022

Check for updates

**ABSTRACT**

Karuppusamy is a deity worshiped in the states of Tamil Nadu and Kerala. Karuppusamy is worshiped as a tribal deity and a guardian deity. In the agrarian community, when people lived as ethnic groups, they formed a unique identity for themselves professionally as well as religiously. Some of these cults are meant to exemplify their cultural practices. Karuppasamy worship is flexible enough to adapt to the place and the circumstances of the people.

**Keywords:** Karuppusamy, Tamil Nadu, Kerala, Agriculture, Cultural Traditions

## முன்னுரை

உழவுத்தொழில் ஈடுபட்ட சமூகமக்கள் இரவு பகல் பார்காமல் வேலையில் ஈடுபட்டனர். அப்படி வேலையில் ஈடுபட்டவர்கள் தங்களுக்கு ஏற்படும் ஆபத்துகளில் இருந்து காத்துக் கொள்ள தாங்கள் வரும் போகும் இடங்களில் எல்லாம், தெய்வங்களை அமைத்து வழிபட்டு தங்களுக்கு உள்ள அச்சத்தைப் போக்கிக் கொண்டனர். கிராமப்புறங்களில் அய்யனார், முனியப்பன், கருப்பசாமி போன்ற தெய்வங்களே காவல் தெய்வங்களாக உள்ளனர். இவர்கள் ஊரின் புறத்திலும், தோட்டத்திலும், நீர்நிலை ஓரங்களிலும் காவல் தெய்வமாக உள்ளனர். ஒரு குறிப்பிட்ட சமூகம் அல்லது ஓர் இனக்குழு ஓரிடத்தில் இருந்து வேறு இடத்திற்கு புலம் பெயரும் பொழுது அம்மக்களால் வழிபடப்பட்ட இத்தெய்வங்களும் இடம் பெயர்வதாய் உள்ளது. இந்த இடப்பெயர்ச்சி தானாக நடந்ததாக அல்லது அம்மகளால் ஏற்படுத்தப்பட்டாதாக உள்ளது. தானாக இடம் பெயருதல் என்பது இறைவன் மக்களைத் தேடி வருதல் என்ற நிகழ்வின் மூலம் நடப்பதாகும். மக்களால் இடப்பெயர்ச்சி அடைதல் என்பது அந்த இடத்தில் இருந்து பிடி மண் எடுத்து வந்து உருவாக்கப்படதாகவும் இருக்கும். இப்படி வந்த தெய்வத்தின் தோற்றக் கதைகள் இடத்திற்கு இடம் மாறுபாடு உடையதாய் அமைகிறது. வீரயுக வழிபாட்டு நடுகல் மரபில் தோன்றிய பல தெய்வங்களுள் ஒன்றாக கருப்புசாமி இங்கு அறியப்படுகிறார். கருப்பு என்பது இருளின் குறியீடு. இரவும் இருளின் குறியீடே. கருப்புசாமி வீரத்தின் குறியீடாகவே பார்க்கப்படுகிறார்.

## ஆண் தெய்வங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

தாய்வழிச் சமுகம் தந்தை வழிச்சமுகமாக மாற்றம் பெற்ற பின்பு, நிலவுடைமைச் சமூகம் வளர்ச்சி பெற ஆரம்பித்தது. நிலவுடைமைச் சமூகத்தில் பெண்ணிடம் இருந்த உரிமைகள் அனைத்தும்

ஆணுக்குரியதாய் மாற்றம் பெற்றன. இந்த கால கட்டத்தில் நில அடிப்படையில் தெய்வங்கள் தோற்றுவிக்கப்படனர். சமூகத்தில் போர்கள் அதிகம் நிகழ்ந்தன. போரில் வெற்றி பெற தெய்வங்களை உருவாக்கி வழிபடும் முறை தோன்றியது.

“மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெரும்மணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்

சொல்லிய முறையான் சொல்லவும் படுமே” (Puliyur Kesigan, 2018)

என்று ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய தெய்வத்தை கூறுகிறார்.

“முருகன் சீற்றத்து உருகெழு குரிசில்” (Balasubramanian, 2002)

என்று புறநானூறு முருகனை சினம்மிகுந்த தெய்வமாகக் குறிப்பிடுகிறது. முருகனும் சேயோனும் ஒருவர் என்பதை பில். எல் சாமி அவர்கள்

“செருமிகு சேஎயோடு உற்ற சூளே

செருமிகு சேஎய்! நிற் பாடுநர் கையே

என்ற வரிகளை எடுத்துக்காட்டி சேயாகிய முருகன் போரில் வல்லவன் என்று அகநானூறும் புறநானூறும் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது” என்று குறிப்பிட்டுள்ளார். (Sami, 1990)

“ஒன்னாத் தெவ்வர் முன்நின்று விலக்கி

ஒளிறு ஏத்து மருப்பின் களிறு எறித்து வீழ்ந்ததென

கல்லே பரவின் அல்லது

நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே” (Balasubramanian, 2002)

என்று புறநானூறு அவ்வூரில் மக்களை காக்க போரில் இறந்து பட்ட வீரர்களைத்தவிர பிற தெய்வங்கள் இல்லை என்கிறது. இது போன்ற நடுகல் வழிபாடே இன்றுள்ள மதுரை வீரன் போன்று மற்ற கிராம தெய்வங்களின் தோற்றத்திற்கும், ஆண் தெய்வங்களின் வளர்ச்சிக்கும் வித்தாகத் திகழ்கிறது. காற்றை போன்று சுழன்று போரிட்டு மக்களுக்காக உயிர்விட்ட ஒரு வீரனே கருப்புசாமியாக மாறியிருக்க வேண்டும். இன்று புராணத்தோடும் தொடர்புப்படுத்திக் கூறப்படுகிறது. நெல்லும் மலரும் தூவி வழிபடுவதே பண்டைய தமிழரின மரபாகும். கருப்பன் என்ற பெயருக்கு முன்னால் முன்னொட்டுகள் சேர்த்து சங்கிலிக்கருப்பன், முப்புலி கருப்பன், பதினெட்டாம் படிகருப்பன், நொண்டிக் கருப்பன், ஆகச கருப்பு, சூலை கருப்பு என்று நூற்றுக்கும் மேற்பட்ட கருப்புசாமியின் பெயர்கள் கூறப்படுகின்றன.

## கறுப்பு வண்ணத்தின் சிறப்பு

இயற்கை நமக்கு இருளையும் ஒளியையும் கொடுத்துள்ளது. இரவையும் பகலையும் படைத்துள்ளது. இரண்டு பொழுதுகளுக்கும் தனித்தனி அழகும் பொருளும் தொன்மங்களும் காட்சிகளும் கதைகளும் உலகம் முழுவதும் நாட்டார் வழக்காற்றியலில் இடம் பெறுகிறது. உலக இலக்கியப் படைப்புகளிலும் இடம் பெற்றுள்ளது. கருப்பு என்பது இரவுக்கான குறியீடு. இரவுக்கான கடவுளாக கருப்புசாமி உருவகிக்கப்படுகிறார். பெரும்பான்மையாக, இரவில் தான் கருப்புசாமிக்கு வழிபாடு நடைபெறுகிறது. திருவிழாவின் பொழுது கருப்புசாமியின் காவல் பூதங்களுக்கு காவுசோறு போடுவதும் இரவில்தான் நடைபெறுகிறது. காவுசோறு படைக்கப்படும் பழக்கம் சங்ககாலத்தில் இருந்து தொடர்ந்து வரும் வழிபாட்டு முறையாகும்.

கருப்புசாமிக்கான சிறப்பு வழிபாடு இருள் நிறைந்த அம்மாவாசை நாளில் நடைபெறுவதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். காத்துக் கருப்பு என்ற சொல் வழக்கு தமிழகத்தில் பரவலாக உள்ளது. கருப்புசாமியின் நிறமும் கறுப்பு, அவருக்கு பிடித்த ஆடையும் கறுப்பு. சபரிமலைக்குச் செல்லும் பக்தர்கள் அணிவதும் கறுப்பாடையே. இந்த பக்தர்கள் கறுப்பாடையை கருப்புசாயின் பாதுகாப்புக் கவசமாகக் கருதுகின்றனர். கருப்புசாமி இரவு வேட்டைக்குப் போவதாக நாட்டுப்புற பாடல்களும் கதைகளும் உண்டு. இதனை கிராமங்களில் சாமிவேட்டைக்கு போதல் என்பர்.

குறிஞ்சி நிலக்கடவுள் முருகனுக்கு நடைபெறும் வேலவன் வெறியாட்டு நிகழ்வு கருப்புசாமி வழிபாட்டு நிகழ்வோடு ஒப்பிடத்தகுந்தது. முருகன் செவ்வேள் என்பதால் குறிஞ்சி நிலத்தில் விளையும் செந்நெல், செந்தினை, செம்மமை நிமுடைய மலர்கள், ஆட்டின் இரத்தம் போன்றவை வெறியாட்டுக்களத்தில் பலி பொருளாக நாலா பக்கத்திலும் படைக்கப்படும். இது போன்றே இன்றைய காலத்தில் கிராம தெய்வங்களுக்கு இரவில் களத்தில் காவுச்சோறு போடும் நிகழ்வும் அமைகிறது. வேலவனுக்கு வெறியாட்டுக் களத்தில் காவுச்சோறு செந்தினையோடு ஆட்டின் இரத்தத்தைக் கலந்து தூவப்பட்டதனை

"வளநகர் சிலம்பப் பாடி, பலிகொடுத்

துருவச் செந்தினை குருதியொடு தூஉய்

முருகாற்றுப் படுத்த வுருகெழு நடுநா" (Thamizhannal & Annaamalai, 2003)

என்று அகநானூறு கூறுகிறது. முருகனின் சினத்தை குறைப்பதற்காக இந்த வெறியாட்டில் பலி கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வேலவன் வெறியாட்டும் இரவு நேரத்தில் தான் நிகழ்ந்து என்பதை எடுத்துக்காட்டுகிறது.

கறுப்பு வண்ணமும் சிவப்பு வண்ணமும் சினத்திற்கும், நிறத்தை உணர்வதற்கும் உரியது என்பதனை,

"கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள" (Puliyur Kesigan, 2018)

"நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப" (Puliyur Kesigan, 2018)

என்று கூறுகிறது.

"முருகுறழப் பகைத்தலைச் சென்று

அகல் விசும்பி னார்ப்பிமிழ" (Thamizhannal & Annaamalai, 2003)

என்று மதுரைக்காஞ்சி முருகு என்பதற்கு வீரம் என்ற பொருளைத் தருகிறது.

"ஒன்னார் முன்னிலை முருக்கிப் பின்நின்று" (Balasubramanian, 2002)

என்று புறநானூறு முருக்கி என்ற சொல்லுக்கும் வீரம் என்ற பொருளைத் தருகிறது.

"கழங்கு மெய்ப்படுத்து கன்னந் தூக்கி

முருகு என மொழியு மாயின்" (Thamizhannal & Annaamalai, 2004)

என்று வேலவன் மேல் முருகன் அருள் வரும் பொழுது, அவன் கன்னம் தூக்கும் என்கிறது.

இங்கு போரில் வீரத்தோடு செயல்படும் பொழுது கன்னம் தூக்குதல், முருக்குதல் (வீர உணர்வு உள்ளத்தில் எழுந்து ஓர் வலிமையைக் கொடுத்தல்) ஆகிய பண்புகள் வெளிப்படுவதை எடுத்துக் காட்டுகிறது. இது முருகனுக்கு உரிய பண்புகள்.

"பெருமையும் உரனும் ஆடுஉ மேன" (Puliyur Kesigan, 2018)

என்று உள்ள வலிமை ஆண்களுக்கு உரிய பண்பாக தொல்காப்பியம் கூறுகிறது. இங்கு போரிடுதல் மற்றும் உள்ள வலிமையோடு செயல்படும் பண்பு ஆகியவை ஆணுக்குரியன என்று இலக்கிய இலணக்கங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த பண்புகள் நிறைந்தவனாக முருகனும்

எடுத்துக்காட்டப்பட்டுள்ளான். முருகனுக்கு உரிய பண்பும் வழிபாடும் கருப்புசாமிக்கும் ஒத்துப் போவதாய் உள்ளது.

## எட்டி மரத் தோட்டத்தின் பெயர்க் காரணம்

இத்தோட்டம் முழுவதும் எட்டிமரங்கள் நிறைந்திருந்ததால் இத்தோட்டத்திற்கு எட்டிமரத்துத் தோட்டம் என்று பெயர் வந்துள்ளது. இத்தோட்டத்தில் கருப்புசாமி வீற்றிருப்பதால் இத்தோட்டப் பெயரை முன்னொட்டாகக் கொண்டு எட்டிமரத்தோட்டத்து கருப்புசாமி என்று பெயர் வந்துள்ளது. சங்க காலம் முதல் கடவுள்களை மரத்தடியில் வைத்து வழிபடும் மரபு இருந்ததனை

"புல வரை அறியாத புகழ் பூத்த கடம்பு அமர்ந்து" (Paramasivan, 2018)

"ஆலமர் கடவுளன்ன நின் செல்வம்" (Balasubramanian, 2002)

என்று பரிபாடலும் புறநானூறும் கடவுள்கள் மரத்தடியில் அமர்ந்திருந்ததைக் கூறுகின்றது.

எட்டிமரங்கள் இப்பொழுது முற்றிலும் அழிந்துவிட்டன. இங்கு எட்டிமரம் மட்டும் அல்லாமல் கூந்தப்பனை, பெரா போன்ற மரங்களும் ஆங்காங்கே உண்டு. கூந்தப்பனை மரம் 27 வருடங்களுக்கு முன்பு மடிந்துவிட்டது.

## கோயில் அமைப்பு முறை

கோயிலின் அமைப்பு முறையானது, சுற்றிலும் கருங்கற்கள் அடுக்கப்பட்டு திறந்த நிலையில் கல்லுக்கட்டு கட்டமாக எட்டிமரம், பெரா, கூந்தபனை போன்ற மரங்கள் சூழ்ந்திருக்க கிழக்கு நோக்கி அமைந்திருந்தது. 2011 ஆண்டு புதிதாக கோயில் எழுப்பப் பட்டது. பாலாலயம் அமைக்கும் பொழுது பாலக்குச்சியில் ஆண் தெய்வத்திற்கு வேலும் பெண் தெய்வத்திற்கு திரிசூலம் அமைத்து வழிபடுவர். இது நம் பண்டைய வழிபாட்டு முறையான கந்து வழிபாட்டின் எச்சமாகத் திகழ்கிறது.

"கொண்டி மகளிர் உண்டுதுறை மூழ்கி

.........................................

வம்பலர் சேர்க்கும் கந்துடை பொதியில்" (Paramasivan, 2018)

என்று பட்டினப்பாலை பாடல் வரிகளின் மூலம் ஊர் நடுவே மக்கள் கூடும் இடத்தில் மகளிர் மரக்கட்டை(கந்து) நட்டு வழிபாடு செய்தது பற்றித் தெரிவிக்கிறது.

இத்திருக்கோயில் கிழக்குநோக்கி அமைந்துள்ளது. கருப்புசாமிக்கு மட்டும் சிறிதாக கருவறை அமைக்கப்பட்டுள்ளது. இதன் வலப்புறம் கன்னிமார்களுக்கென்று சிறு கூடாரம் அமைக்கப்பட்டுள்ளது. கருப்புசாமி, கன்னிமார்களுக்கு இங்கு சிலை உருவ அமைப்பு கிடையாது. குலவிக்கல் வைத்தே வழிபடுகின்றனர். பிரம்பும், கத்தியும், இதன் ஆயுதமாக வழிபடப்படுகிறது. ஆணிசெருப்பும் வழிபடப்படுகிறது. கருப்பசாமி இரவில் வேட்டைக்கு போகும் பொழுது இதை அணிந்து செல்வார் என்பது மக்களின் நம்பிக்கை. கருவறைக்குப் பின்புறம் தற்பொழுது தல விருட்சமாக பெரா மரம் உள்ளது. கன்னிமார்களை பற்றி கூறுமிடத்து,

"அறுவர்க் கிளைய நங்கை இறைவனை

ஆடல்கண் டருளிய அணங்கு சூருடைக்

கானகம் உகந்த காளி தாருகன்

பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்" (Thamizhannal & Annaamalai, 2004)

என்று காளியை எழுவரில் இறுதியாக இருப்பவராக எடுத்துரைக்கிறது. இதற்கு பின் வந்த தேவாரப்பதிகங்களும், தக்கயாகப்பரணியும் ஏழு கன்னியர்கள் பற்றி பேசுகின்றன. பக்தி இலக்கிய காலகட்டத்தில் ஏழு கன்னியர்கள் சிவன், திருமால், பிரம்மாவின் அவதாரத்தோடு ஒப்பிட்டு அவர்களின்

மனைவியர்களாக மாற்றம் பெற்றனர். இவர்கள் கிராமப்புறங்களில் இன்றும் கன்னிகளாகவேத் திகழ்கின்றனர். கிராமப்புறங்களில் பெரும்பாலும் ஆண்தெய்வங்களின் கோயில்களில் இடம்பெறுகின்றனர். பெண்தெய்வக் கோயில்களில் பிரகாரத்தேவதைகளாகவே ஒரு சில இடங்களிலேயே உள்ளனர். இவர்கள் பிள்ளையாருக்கு அடுத்து முதல் பூசை பெறுபவர்களாகத் திகழ்கின்றனர்.

கருப்புசாமி கருவறை, கன்னிமார்கள் கூடாரம் தலவிருட்சம் இவற்றைச் சுற்றி சிறிதாக மதிற்சுவர்கள் எழுப்பி வடக்கு மற்றும் கிழக்கு என்று இருதிசைகளில் வாயில்கள் அமைக்கப்பட்டு சிறியதாக கம்பிக்கதவுகள் அமைக்கப்பட்டுள்ளது.

கோயிலின் வெளியே வலப்புறம், பெரா மரம் தவிர்த்து மற்றொரு தலவிருட்சமாக பனைமரம் அமைந்துள்ளது. கருப்புசாமிக்கு எதிர்புறம் அதன் காவலரான ஒண்டிவீரர் பெரிய வேலாகக் காட்சியளிக்கின்றார். கோயிலின் உள்ளே கருப்புசாமியை நோக்கியவாறு மக்கள் தங்கள் வேண்டுதலுக்காக வடித்து வைத்த வேல்கள் வரிசையாக நடப்பட்டுள்ளது.

கோயில் கருவறைக்கு மேல் கருப்புசாமி தலைப்பாகை அணிந்து, கம்பு, அரிவாள், வைத்து கம்பீரமாக நிற்கும் தோற்றத்துடன் கூடிய உருவம் உள்ளது. இவ்வூரில் உள்ள சாத்தந்தை குலமக்களின் காவல்தெய்வமாக கருப்புசாமி விளங்குகின்றார்.

## கருப்புசாமி வரலாறு

நல்லசாமி கவுண்டர் என்பவர் மயிலாடியைச் சார்ந்த கொங்கு வேளாளரில் சாத்தந்தை குலத்தவர். அவரும், அவரைச் சார்ந்த இரண்டு மூன்று குடும்பத்தினரும் பஞ்சம் பிழைப்பதற்காக அந்தியூர் அருகேயுள்ள சித்திரெட்டிபாளையம் கிராமத்திற்கு குடிபுகுந்துள்ளனர். இங்கு வந்த பின்னர் அங்குள்ள நிலபுலன்களை விற்று கொண்டுவந்த பணத்தை முதலீடாக வைத்து இவ்வூரில் ஆங்காங்கே சில நிலங்களை வாங்கியுள்ளனர். அந்த நில வகையில் எட்டிமரத்துத் தோட்டமும் அடங்கும்.

ஒருநாள் நல்லசாமி கவுண்டர் எட்டிமரத்துத் தோட்டத்தில் விதை விதைக்க உழுது கொண்டிருந்தாராம். அப்பொழுது ஒரு முதியவர் அங்கே வந்து அவரிடம் எனக்கு பசிக்கிறது சாப்பிட எதாவது இருந்தால் கொடு என்றாராம். ‘உழுற எடத்துல என்ன இருக்கும் கொஞ்சம் அந்த மரத்தடியில ஒக்காருங்க, எங்க ஊட்டுல கொஞ்ச நேரத்துல சோறு கொண்டுவருவா, அப்பறம் சாப்படலாம்’ என்று சொல்லிவிட்டு உழ ஆரம்பித்து விட்டாராம். அவர் ஒரு சுற்று வருதற்குள்ளே அவர் மனைவியும் வந்துவிட்டாராம். வந்தவரிடம் பெரா மரத்தடியில் ஒரு அய்யன் ஒங்காதிருப்பாரு அவர கூப்பிடு என்று கூற’ அவர் மனைவியே அய்யனா! எந்த அய்ய! அங்க யாருமே இல்லையே! என்று கூறியுள்ளார். அங்கு பார்வையை செலுத்திய நல்லசாமி கவுண்டரோ ‘என்ன இது இப்பதானே வந்தாரு நான் அவர் அங்க ஒக்காந்ததைப் பாத்தேன் நா ஒருசுத்து வரதுக்குள்ள எங்க போயிருக்க முடியும்! இரு நா போயி, அவரு எங்காயவது போயிருக்காரானு பாக்ர’ என்று சொல்லி நாலா புறமும் சுற்றிலும் தேடியுள்ளார். ஆனால் அவர் எங்கையுமே கண்ணிற்கு எட்டிய தூரம் தென்படவே இல்லை. திரும்பி வந்தவர் மனைவியிடம் இது என்ன அதிசியமா இருக்கு, ஒருவேலை வந்தது பேயோ பிசாசோ இருக்குமோ, என்று சொல்லி தன் மனைவியிடம் புலம்பியுள்ளார். அப்போது ஒரு குரல் கேட்டுள்ளது நல்லசாமி நான்தான் கருப்புசாமி நான் தனியாக உன்னைவிட்டு இருக்க முடியவில்லை அதனால் நான் இங்கேயே வந்துவிட்டேன் எனக்கு இதே இடத்தில் கோயில் கட்டி வழிபடுங்கள் என்று கூறி மறைந்து விட்டதாம். இந்நிகழ்வு போன்றே சிலம்பில்

“கள்வனோ அல்லன்; கருங் கயல் கண் மாதராய்!

ஒள் எரி உண்ணும், இவ் ஊர் என்றது ஒரு குரல்” (Manickavasakar, 2002)

என்று துன்பமாலை காதையில் சூரியன் அசிரீரியாக கண்ணகியிடம் கூறியதை ஒப்பிட்டு நோக்கத்தக்க வகையில் உள்ளது.

சித்ரெட்டிபாளையம் சாந்தந்தை குலமக்களின் மூதாதையர்கள் மயிலாடு துறையில் இருந்தபொழுது அவர்களின் குலதெய்வமாகிய வெள்ளோட்டு இராசாசாமியின் காவல் தெய்வமான கருப்புசாமிக்கு பிடிமண் எடுத்து வந்து கோயில் கட்டி வழிபாடு செய்து வந்துள்ளனர். மயிலாடு துறையில் பஞ்சம் நிலவ பலரும் அப்படி அப்படியே வெவ்வேறு ஊருக்கு குடிபெயர்ந்து விட இறுதியாக நல்லசாமிகவுண்டரும் அவரது உடன்பிறப்புகளும் சித்திரெட்டிபாளையத்திற்கு குடிபெயர்ந்துவிட்டார். குடிபெயர்ந்துவிட்ட போதிலும் இவர் கருப்புசாமியை வீட்டில் விளக்கு ஏற்றி தினமும் வழிபட்டு வந்துள்ளனர். இப்படி வழிபட்டு வந்த நிலையில்தான் இப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்துள்ளது. அதன் பிறகு இவர் அதே இடத்தில் கருங்கல் கட்டடம் கட்டிக் கோயில் எழுப்பியுள்ளார்.

## சிறப்பு நிகழ்வுகள்

வீரமுத்துக்கவுண்டர் என்பவர் அவரின் தங்கையின் குலதெய்வத்துக்கு பூந்துறை சென்று திரும்பி வரும் வழியில் கோணவாய்க்கால் என்ற இடத்தில் கள்வர்களால் தாக்கப்பட்டு ஒரு மாதம் கழித்து மருத்துவ சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டாராம். அவருக்கு திருமணமாகி இருமகள்கள் மற்றும் 16 வயதில் ஒரு மகனும் இருந்துள்ளனர். அவர் மகனின் பெயர் முத்து வேலப்ப கவுண்டர்.

சிலகாலம் சென்று அவருக்கு திருமணம் ஆகியுள்ளது. அவருக்கு திருமணம் ஆகியதில் இருந்து அவரின் தாயார் பாவாயம்மாள் தனியாகத்தான் சாலையில் படுத்துக்கொள்வாராம். அப்படி படுத்துக்கொள்பருக்கு சில மாதங்களாகவே படுக்கையில் இருந்து கீழே விழுந்து ஏதோ உளறவும் செய்வாராம். இப்படி ஒருநாள் உளறியவரைக்கண்ட அவரின் மகன் இந்த அம்மாவிற்கு வேறு வேலையே கிடையாது. இதற்கு பேயோபிசாசோ பிடிச்சிருக்கும் போல என்று சொல்லி, ஒருநாள் நல்லா சாட்டை அடி குடுத்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று சத்தமாகவே சொல்லியுள்ளார். இதைக்கேட்ட அந்த அம்மாள் அப்பா நான்தான் உன் அப்பா வீரமுத்துக் கவுண்டார், நான் கருப்புசாமி கோயிலில்தான் தஞ்சம் அடைந்துள்ளேன். நீ ஒரு நாள் விடியற்காலையில் தண்ணீர் கட்டும்பொழுது கூட தண்ணீ வடிந்துவிட்டது என்று கூட சத்தம் போட்டேனே ஞாபகம் இருக்கிறதா என்றாராம். அப்போது முத்துவேலப்ப கவுண்டர் அது யாரோ கோயிலுக்கு வாக்கு கேட்க வந்தவர்கள் சத்தமிட்டு இருப்பார்கள் என்று நினைத்துள்ளார்.

அதன் பிறகு அவரின் அம்மா உளறுவதை நிறுத்திவிட்டாராம். அடுத்த நாளில் இருந்து அவர் தொடர்ந்து அவர்களின் வீட்டில் இருந்து யாராவது முடிந்த போதெல்லாம் மாலை குளித்துவிட்டு கருப்புசாமி கோயிலுக்கு தீபம் இட்டு வருகின்றனராம். இது இன்று வரை தொடர்கிறது என்று ஒரு புன் சிரிப்போடு முத்து வேலப்ப கவுண்டர் தன் அனுபவங்களை கூறினார். அவர் நல்ல ஆத்மாக்கள் கோயிலில் தஞ்சமடையும் என்ற செய்தியையும் கூறினார்.

இக்கோயில் திருநீறை பேய்பிடித்தவர்கள் வைக்க மாட்டார்களாம். ராணி (ராணி- வயது 50- விவசாயி) என்பவரின் மகளுக்கு பேய் பிடித்துவிட்டதாம் அப்போது அவர் கருப்புசாமி கோயிலுக்கு அந்த குழந்தைக்கு தெரியாமலே சென்று வந்தாலும் நீ இன்னைக்கு கருப்புசாமி கோயிலுக்கு போயிட்டு வந்துருக்க என்று சரியாக கூறிவிடுமாம். அந்த திருநீறையும் வைக்காதாம். அங்கு சென்று வந்தாலே அன்று அந்த குழந்தை எனக்கு பயமாக இருக்கிறது என்று கூறுமாம். பேய் அந்த குழந்தையை விட்டு சென்றவுடன் அந்தக்குழந்தையே அந்த கோயிலுக்கு போலாம் என்று கூட்டிச் சென்றதாம்.

தேவராஜ் என்பவரின் கனவில் ஒரு நாள் இரவில் கருப்புசாமி பனைமரம் வேரோடு சாய்ந்து என்னை அழுத்திக்கொண்டுள்ளது என்று கூறியதாம். இது என்னடா இப்படி ஒரு கனவு என்று சொல்லி கனவு கண்டவர் எழுந்துவிட்டு மீண்டும் படுத்துவிட்டாராம். காலையில் எழுந்தவர் எதற்கும் கோயிலுக்கு சென்று பார்க்கலாம் என்று பார்த்தால் அங்கு பனைமரம் சாய்ந்து கருப்புசாமியை அழுத்திக்கொண்டிருந்ததாம்.

இக்கோயில் திருவிழாசெய்ய வசூல் செய்த பணத்தில் திருவிழா செலவு போக 500 ரூபாய் மீதம் இருந்ததாம் இருபது வருடத்திற்கு முன்பு. அதை மாரியம்மன் கோயில் திருவிழாவின் போது பண்டுவிட்டாரார்களாம் (வட்டிக்கு கொடுத்தல்). அது பின்பு இரண்டு இலட்சமாகப் பெருகியதாம். அதை

வைத்துதான் 2011 ஆண்டு புதியதாக ஒன்டறரைலட்சம் மதிப்பில் கோயில் கட்டினாராம். ஊரின் பெரிய புள்ளிகள் கோயில் கட்டுவதை தடுக்க பல முயற்சிகள் செய்தும் தடுக்க முடியவில்லை என்று வாய்மொழிச்செய்தி குறிப்பிடுகிறது.

## வழிபாட்டுமுறை

வெள்ளிக்கிழமை, அம்மாவாசை, பௌர்ணமி ஆகிய சிறப்பு தினங்களில் மாரியம்மன் கோயில் பண்டாரம் மூலம் பூசை நடைபெறுகின்றன. இப்பகுதி கொங்குவேளாளக் கவுண்டார்களும் தாங்கள் விரும்பினால் அவர்களே பூசை செய்யும் உரிமை உண்டு. மற்றபடி அனைத்து இன மக்களும் தீபம் ஏற்றி வழிபடுகின்றனர்.

இக்கோயிலில் பல்லி வாக்கு கேட்டல் சிறப்பான வழிபாட்டு நம்பிக்கை உள்ளது. அதிகாலையில் 3.30 - 5.30 மணிவரை, மாலை 6 - 6.30 மணிவரை மக்கள் வாக்கு கேட்கும் நேரமாகும். பல்லி சொல் கேட்டல் என்பது சங்க காலத்தில் இருந்து தொடர்ந்து வரும் மரபாக இருக்கிறது. இதனை

“பல்மண் ஓங்கிய நல்இல் ஒருசிறை நிலைஇ

பாங்கர் பல்லி படு தொறும் பரவி,

கன்று புகு மாலை நின்றோள் எய்தி” (Thamizhannal & Annaamalai, 2003)

அகநானூறு தலைவி தன் இல்லத்திலேயே பல்லியின் நன்நிமித்தம் கேட்க நின்றதை பற்றி குறிப்பிடுகிறது. சங்ககாலத்தில் இல்லத்தில் இருந்து தொடங்கிய இந்த நிமித்தம் இன்று கோயில் வரை வளர்ந்துள்ளது.

இவ்வூர் மக்கள் எந்த ஒரு செயலுக்கு முன்பும் கருப்புசாமியிடம் பல்லி வாக்கு கேட்டே செய்கின்றனர். பல்லி கிழக்கு, வடக்கு பக்கம் சொன்னால் இராம வாக்கு நல்லது என்றும், மேற்கு தெற்கு சொன்னால் உத்தரவாக்கு சரியன்று என்றும் எடுத்துக் கொள்கின்றனர்.

## சாத்தந்தை குலத்தாரின் சிறப்பு வழிபாட்டு முறை

சித்திரெட்டிபாளைத்தில் உள்ள சாத்தந்தை குல மக்கள் ‘கருப்புசாமி செய்தல்’ என்ற ஒரு வழிபாட்டு முறையைச் செய்கின்றனர். இது கருப்பு சம்மந்தமாக நடைபெறும் வழிபாடகும். சாத்தந்தை குலத்தில் உள்ள ஆண்களும், சாந்தந்தை குலத்திற்கு திருமணமாகி வந்த பெண்களும் கருப்பு ஆடை அணியக் கூடாது. அப்படி அணிந்தால் அதனால் தீமை உண்டாகும் என்று நம்புகின்றனர். குடும்பத்தலைவருக்கு பெண் குழந்தை பிறக்கும் பட்சத்தில் அந்தக் குழந்தை திருமணம் செய்து செல்லும் வீட்டில் கருப்பு ஆடை அணிய வேண்டி வந்தால் எந்த பாதிப்பும் வரக் கூடாது என்று வேண்டி செய்வதே இவ்வழிபாடு. இது பெண் குழந்தை வயதுக்கு வந்த பின் தாய் தந்தை இணைந்து செய்யும் வழிபாடாகும். இதற்கு முன்பு பெண்ணின் தாய் எழுதீங்கள் சீரைச் செய்திருக்க வேண்டும். இது பெரும்பலும் அவர்களின் திருமணத்தின் போதே நடந்திருக்கும். அப்டி நடக்கவில்லை என்றால் எங்காவது வேம்பரசுக்கு திருமணம் நடக்கும் பொழுது நடத்திக்கொள்ளலாம். இப்பொழுது எல்லாம் தனியே எதாவது கோயிலில் வைத்து நடத்திக் கொள்கின்றனர்.

முதலில் சாமி செய்வோர்கள் தங்கள் குடும்ப பெரியோரிடம் அனுமதி பெறவேண்டும். பின்பு வெள்ளோடு இராசாக்கோயில் சென்று பண்டாரத்திடம் தாங்கள் சாமி செய்யவிரும்புவதை தெரிவித்து ஆடிமாதம் சாமிசெய்வதற்கான தேதியைக் குறித்து வருவார்கள்.

சாமிசெய்யும் தம்பதிகள் இருவரும் சாமிசெய்யும் நாள் அன்று முழுநாளும் விரதம் இருப்பார்கள். அவர்களின் தோட்டக்கிணற்று மேட்டில் பச்சை தென்னை ஓலையில் பந்தல் போடுவர். இராசாக்கோயில் பூசாரி அன்று இரவு பத்துமணிக்கு மேல்வந்து இராசாசாமி நல்லமங்கை, கருப்புசாமி வெள்ளித்திருவுருவம் கொண்டுவந்து அலங்காரம் செய்து தம்பதிகள் குழந்தைகள் என குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் அமரவைத்து பூசைசெய்வார்கள். இது செவ்வாய் இரவு நடைபெறும்.

வீட்டில் பூசைமுடிந்ததும் கோயிலில் போடப்பட்டுள்ள பச்சைபந்தலில் அதே போன்று சாமிவைத்து அலங்கரித்து தம்பதிகளுக்கு நன்னீராட்டி புது கருப்பாடை அணியச்செய்து பூசை செய்வர். பின்பு ஒரு 'கருப்புக்கிடாய், கருப்புக் கோழி' ஆகியவை பலியிடப்படும். ஆட்டின் ஈரல் எடுத்து தென்னம்பாளையின் விரித்து வைத்து கருப்புசாமிக்கு பூசை செய்வர். இதை சுவான் பூசை என்பர்.

பூசைசெய்த பின்பு கோழிக்கறி சமைத்து தம்பதிகளுக்கு முதலில் பரிமாறுவர். பின்பு உறவினர்களுக்கும் மற்றவர்களுக்கும் விருந்து படைப்பர். இதன் பின்பு அவர்கள் வீட்டிற்கு சென்று விடுவார்கள். இராசாக்கோயில் பூசாரி மட்டும் பூதங்களுக்கு காவுசோறு போட்டுவிட்டு அவரும் சென்றுவிடுவார்.

மறுநாள் காலை புதன் அன்று ஆட்டுக்கிடாயை சமைத்து விருந்தாகப் படைப்பார்கள். உணவு மீதமானாலும் வீட்டிற்கு எடுத்துவரமாட்டார்கள். இந்த விருந்து மண்டபம் அல்லது கோயில் இடத்தில் நடைபெறும்.

## திருவிழா

ஐப்பசிமாதம் இரண்டாம் செவ்வாய் அன்று திருவிழாவானது தொடங்குகிறது. அன்று காலை ஒரு ஏழுமணியளவில் பண்டாரம் கோயிலை சுத்தம் செய்வார். பின்பு வழிபாடு செய்து சாமிக்கும் பண்டாரத்திற்கும் காப்புக் கட்டப்படும். இந்தக் காப்புக்கட்டும் வழக்கம் சங்காலம் முதலே இருந்துள்ளதை,

"விடர்முகை அடுக்கத்து விரல்கெழு சூலிக்குக்

கடனும் பூணாம், கைந்நூல் யாவாம்" (Thamizhannal & Annaamalai, 2002)

என்ற பாடல் வரி மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

பின்பு இரவு 12 மணி அளவில் பூசைதொடங்கி விடியவிடிய 4 மணி வரை கருப்புசாமி, பொட்டுசாமி, எல்லை முனியப்பன், என்று மூவருக்கும் சேர்த்து பூசைசெய்து பொங்கல் வைத்து ஊர்பொதுவில் கிடாய் வெட்டப்படும். பூசையின் போது கன்னிமார்களுக்கு காதோலை கருகமணியும், கருப்புசாமிக்கு தென்னம்பாளையும் வைத்து பூசை செய்யப்படும். தென்னம்பாளையானது தன்னகத்தே பல மருத்து குணங்களைக் கொண்டு விளங்குவது ஆகும். கருப்புசாமிக்கு சுடுவான் பூசை செய்யும் பொழுது கன்னிமார்களை மூடிவைத்துவிடுவார்கள். மறுநாள் புதன் அன்று கிடாய்க்கறி அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கப்படும். பின்பு மாலை மறுபூசைசெய்து திருவிழாவை நிறைவு செய்துகொள்வார்கள். திருவிழா நிறைவுபெற்ற தருணத்தில் மக்கள் அனைவரும் சென்றதும் ஏழுமணியவில் பணடாரம் கருப்புசாமி கோயிலில் காவுசோறு போடுவார். காவு சோறு போடுதல் தமிழகத்தில் மற்ற பகுதிகளிலும் உண்டு. காவுசேர்று போடும் பழக்கம் பற்றி தொ. பரமசிவம் "சினம்மிகுந்த ஆண்தெய்வக் கோயில்களில் கோயில்களுக்குச் சற்றுத் தள்ளி இருட்டில் சென்று சாமியாடுபவர் சோற்றுத் திரள்களை ஆகாயத்தில் எறிகிறார். அவ்வாறு வீசி எறிய சாமியாடி கைகளை உயர்த்தும் போதே இருட்டில் மேலிருந்து வந்து தெய்வங்கள் அள்ளிக் கொண்டு போய்விடுகின்றன என்பது நம்பிக்கை" என்று குறிப்பிட்டுள்ளார். பண்பாட்டு அசைவுகள் திருவிழாவில் அனைத்து மக்களும் கலந்து கொண்டாலும் கவுண்டர் இனத்தவர்கள் மட்டுமே வரி செலுத்துகின்றனர். மற்றவர்களிடம் வரி வாங்குவது இல்லை. அவர்கள் திருவிழாவில் மட்டும் பங்குகொள்கின்றனர் (Paramasivan, 2018).

## முடிவுரை

எட்டிமரத்துக் கருப்புசாமி மற்ற இடங்களில் உள்ள கருப்புசாமியைக் காட்டிலும் சற்று மாறுபட்ட வகையில் தானே தன் குலத்தவருக்காக சுயம்புவாகத் தோன்றிய தெய்வமாக இருக்கிறது. இங்கு மேற்கொள்ளப்படும் கருப்புசாமி செய்தல் என்பது ஒரு குல மக்களின் வழிபாட்டுச் சடங்காக மட்டுமே இருக்கிறது. கறுப்பு ஆடை என்பது இங்கு ஒரு குலக் குறியீடா உருபெற்றுள்ளது. பொதுவாக கொங்கு வேளளர் தங்கள் குலக்குறியீடா அமைந்த பொருட்களை பயன்படுத்துவது இல்லை. எடுத்துக்காட்டாக காடை குல மக்கள் காடைக்குருவியின் மாமிசத்தை உண்பது இல்லை, பண்ணை குல மக்கள்

பண்ணைக்கீரையை உண்பது இல்லை. கர்வுகொடுத்தல் மற்றும் காவுசோறு படைத்தல் போன்ற வழிபாட்டு முறைகள் சங்ககால வழிபாட்டு எச்சத்தை நினைவு கூர்வதாகவும் அமைந்துள்ளது.

## References


Balasubramanian, K.V., (2008) Purananuru, New Century Book House, Chennai, India.

Manickavasakar, G., (2002) Silappatikaram, Uma pathippagam, Chennai, India.

Paramasivan, Tho., (2018) Panpaattu Asaivukal, Kalachuvadu Publications, Chennai, India.

Puliyur Kesigan, (2018) Tholkappiyam, Saratha Pathippagam, Chennai, India.

Sami, P.L., (1990) Sanga Noolgalil Murugan, Sekar Pathipagam, Chennai, India.

Subramanian, S.V., (2003) Pathupattu, Koviloor madalayam, Koviloor, India.

Thamizhannal, Annaamalai, (2002) Kurunthogai, Koviloor madalayam, Koviloor, India.

Thamizhannal, Annaamalai, (2003) Akananuru, Koviloor madalayam, Koviloor, India.

Thamizhannal, Annaamalai, (2004) Ainkurunuru, Koviloor madalayam, Koviloor, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

### About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License